සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தில் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான **திறந்த** போட்டிப்பரீட்சை - 2012

**Open** Competitive Examination for the Recruitment to the post of Statistical Officer - Grade II of the Department of Census and Statistics - 2012


**(02)** பொது அறிவு
**General Knowledge**

*ஒரு மணித்தியாலம்*
*One hour*

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்

***மிக முக்கியம் :***

விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்



* **விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.**

**1 2 3 4**

உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் பக்கத்திலும் எழுதுக.

....................................

சுட்டெண்

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....................................

நோக்குநரின் முதலெழுத்தொப்பம்.

**முக்கியம் :**

* இவ்வினாத்தாள் I, II எனும் இரண்டு பகுதிகளையும் **50** வினாக்களை **05** பக்கங்களிலும் கொண்டுள்ளது.
* விடைகளை எழுது முன்பாகத் தாள்களைப் பக்க இலக்கங்களுக்கு அமைய ஒழுங்குபடுத்துக.
* **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய நேரம் **ஒரு மணித்தியாலமாகும்.**
* கணிப்பான்கள் பயன்படுத்த இடமளிக்கப்பட**மாட்டாது.**
* மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.
* ***உமக்கு தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.***
* விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.
* **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனாவினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சில் பயன்படுத்த வேண்டாம்.**
* இவ்வினாத்தாளை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல் அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.
* ***தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துக்கள், அழிக்கும் வெண்மை பயன்பாடு, மற்றும் பென்சில் பயன்படுத்தி அளிக்கப்பட்ட விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.***

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 12 | |
| 3 | 13 - 25 | |
| 4 | 26 - 37 | |
| 5 | 38 - 50 | |
| | மொத்தம் | |

**இறுதிப் புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாள்களைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி I

- **1** தொடக்கம் **30** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் **சரியான அல்லது மிகப்பொருத்தமான** விடையைத் தெரிந்து அதன் **இலக்கத்தை** வினாவுக்கு எதிரிலுள்ள **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

1. இவ்வாண்டில் நடாத்தப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பின்படி இலங்கையின் சனத்தொகை, மில்லியன்,
   (1) 19.2 இலும் சிறிது கூடியது (2) 20.2 இலும் சிறிது கூடியது
   (3) 21.2 இலும் சிறிது கூடியது (4) 22.2 இலும் சிறிது கூடியது (………)

2. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் ஆரம்ப அடிப்படை ஆண்டு எது ?
   (1) 1948 (2) 1952 (3) 1956 (4) 1972 (………)

3. உல்லாசப் பயணக் கைத்தொழில் பெருமளவில் அபிவிருத்தியடைந்து வரும் மாவட்டம் எது ?
   (1) மட்டக்களப்பு (2) யாழ்ப்பாணம் (3) இரத்தினபுரி (4) அனுராதபுரம் (………)

4. இலங்கையில் ஹபயாஸ்கோபுஸ் (Habeas corpus) ஆணையை வெளியிட அதிகாரம் இருப்பது,
   (1) மாவட்ட நீதிமன்றத்திற்கு (2) மேல் நீதிமன்றத்திற்கு
   (3) மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்கு (4) உயர் நீதிமன்றத்திற்கு (………)

5. இலங்கைப் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய கட்டாய வயதுப் பருவம் எது ?
   (1) 5 -12 (2) 5 - 13 (3) 5 - 14 (4) 5 -15 (………)

6. இலங்கையில் முதன் முதலில் கலாசார அலுவல்களுக்காக அமைச்சொன்றை ஆரம்பித்த வருடம்
   (1) 1948 ஆகும் (2) 1956 ஆகும் (3) 1960 ஆகும் (4) 1972 ஆகும் (………)

7. வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தின்படி பின்வரும் எந்த நாணய வகைக்கு அதிக இலங்கை ரூபாய்களைப் பெற முடியும் ?
   (1) ஸ்டேர்லின் பவுண் (2) அமெரிக்க டொலர்
   (3) அவுஸ்திரேலிய டொலர் (4) கனேடிய டொலர் (………)

8. வட மாகாணத்தில் பனைச் செய்கையை ஆரம்பித்தவர்கள்
   (1) மலபார் இனத்தவர்கள் (2) போர்த்துக்கேயர்கள்
   (3) ஒல்லாந்தர்கள் (4) பிரித்தானியர்கள் (………)

9. "உதுரு - மிதுரு" நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான செயற்றிட்டமாவது,
   (1) புகையிரதப் பாதையை நீடிப்பது
   (2) குடிநீர் வழங்குவது
   (3) இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி வழங்குவது
   (4) விவசாயத்தை அபிவிருத்தி செய்வது (………)

10. இலங்கையின் தேயிலைக் கைத்தொழில் பற்றிய **பிழையான** கூற்று எது ?
    (1) 1824 ஆம் ஆண்டு சீனாவிலிருந்து கொண்டு வரப்பட்ட முதல் தேயிலைச்செடி பேராதனையிலுள்ள தாவரவியற் பூங்காவில் நடப்பட்டது.
    (2) 1867 ஆம் ஆண்டு ஜேம்ஸ்டேலர் என்பவர் லூல்கந்துர தோட்டத்தில் 19 ஏக்கர் காணியில் தேயிலைச் செய்கை பண்ணினார்.
    (3) 2011 ஆம் ஆண்டில் முதன் முதலாக மூன்று இலட்சம் மெட்ரிக் தொன் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது
    (4) 2011 ஆம் ஆண்டு ஐரோப்பிய சங்கத்தினால் ஆகக் கூடியளவு தேயிலை விலைக்கு வாங்கப்பட்டது. (………)

11. ஜோர்ஜ் கீட் (George Keyt 1901 - 1993) என்பவர் இலங்கையில் வாழ்ந்த ஒரு சிரேட்ட
    (1) இசைக்கலைஞராவார் (2) ஓவியராவார்
    (3) நாடகாசிரியராவார் (4) வரலாற்றாசிரியராவார் (………)

12. இந்நாட்டுக்கு பைலா மற்றும் கறபிஞ்ஞா சங்கீத முறைகளை அறிமுகஞ் செய்தவர்கள்,
    (1) போர்த்துக்கேயர்களாவார்கள் (2) மலபார் இனத்தவர்களாவார்கள்
    (3) ஒல்லாந்தர்கள் ஆவார்கள் (4) பிரித்தானியர்கள் ஆவார்கள் (………)

[பக். 3 ஐப் பார்க்க

13. போர்த்துக்கேய, ஒல்லாந்த மற்றும் பிரித்தானிய ஆட்சிக் காலங்களின் போது பொதுப் பண்பாக பின்வரும் எது **அமைந்திருக்கவில்லை** ?
(1) அவரவர்களின் சமயங்களைப் பரப்புதல்
(2) பொருளாதாரப் பயிர்ச் செய்கைகள் சிலவற்றை ஆரம்பித்தல்
(3) தேசிய கலாசாரத்தைக் கவனியாது விடல்
(4) அடங்கி நடக்கும் குடிமக்கள் வகுப்பினரை உருவாக்குதல் (.........)

14. இலங்கையில் தொழிலாளர் இயக்கங்களின் ஆரம்பகர்த்தா எனக் கருதப்படுபவர்,
(1) திரு. ஏ.ஈ. குணசிங்க
(2) கலாநிதி. என். எம். பெரேரா
(3) திரு. பாலா தம்போ
(4) திரு. ஏ. எம். எம். அஸீஸ் (.........)

15. பின்வருபவர்களுள் மருத்துவத் துறையில் பிரபல்யமான இலங்கை அரசன் யார் ?
(1) எல்லாளன்
(2) புத்ததாச மன்னன்
(3) சிறிசங்கபோ மன்னன்
(4) தாதுசேன மன்னன் (.........)

16. "ஒரு குடும்பத்துக்கு ஒரு பிள்ளை" என்ற கொள்கையைப் பின்பற்றும் ஆசிய நாடு எது ?
(1) சிங்கப்பூர் (2) சீனா (3) மலேசியா (4) யப்பான் (.........)

17. பின்வரும் நாடுகளுள் உலகில் **கூடுதலாகத்** தங்கத்தை உற்பத்தி செய்யும் நாடு எது ?
(1) சீனா
(2) ஐக்கிய அமெரிக்க நாடுகள்
(3) அவுஸ்திரேலியா
(4) தென் ஆபிரிக்கா (.........)

18. ஐக்கிய நாடுகளின் அமைப்பின் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் ஒரேயொரு ஆசிய நாடு எது ?
(1) இந்தியா (2) சீனா (3) யப்பான் (4) தாய்லாந்து (.........)

19. ஒருவர் சர்வதேச திகதிக்கோட்டைக் கடக்கும்போது ஒரு நாளைக் கூட்டுவது,
(1) வடக்கிலிருந்து தெற்கிற்குச் செல்லும் போதாகும்
(2) கிழக்கிலிருந்து மேற்குக்குச் செல்லும் போதாகும்
(3) மேற்கிலிருந்து கிழக்கிற்குச் செல்லும் போதாகும்
(4) தெற்கிலிருந்து மேற்குக்குச் செல்லும் போதாகும் (.........)

20. "எனக்கு கனவொன்று உள்ளது", என்ற பிரபல கூற்றைக் கூறியவர்,
(1) மகாத்மா காந்தி
(2) கார்ல் மார்க்ஸ்
(3) மார்ட்டின் லூதர் கிங்
(4) லியோ டோல்ஸ்டோய் (.........)

21. இறந்தமொழியாகக் கருதப்படும் மொழியொன்றை அரச மொழியாக உபயோகிக்கும் நாடு எது ?
(1) எகிப்து (2) ஈரான் (3) ஈராக் (4) இஸ்ரேல் (.........)

22. ஐக்கிய நாடுகள் சபையின், அகதிகளுக்கான நிறுவனம் எது ?
(1) UNITAR (2) UNIDR (3) UNHCR (4) UNDRC (.........)

23. கதகளி நடன முறை எப்பிரதேசத்தைச் சேர்ந்தது ?
(1) கேரளத்தை
(2) கர்நாடகத்தை
(3) வங்காளத்தை
(4) ஆந்திராப் பிரதேசத்தை (.........)

24. ஒலிம்பிக் கொடியில் ஐந்து கண்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் **ஐந்து** நிறங்களையும் காட்டும் விடை எது ?
(1) நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிகப்பு
(2) நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, வெள்ளை
(3) நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, கபிலம்
(4) நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சாம்பல் (.........)

25. பின்வரும் எந்த டெசிபல் எண்ணிக்கையை ஒலி மீறும் போது ஒலியினால் சூழல் மாசடையும் நிலையை அடையும் எனக் கருதப்படும் ?
(1) 75 (2) 80 (3) 85 (4) 90 (.........)

[பக். 4 ஐப் பார்க்க

26. "மனிதன் இயற்கையை வெல்ல வேண்டும்" எனும் தத்துவம் உள்ளடங்குவது,
(1) மேற்கத்தேய தத்துவவியலில் (2) இந்திய தத்துவவியலில்
(3) சீன தத்துவவியலில் (4) ரஷ்ய தத்துவவியலில் (.........)

27. நிலைபேறான அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு ஆகியவற்றுக்காகத் தனது நாட்டில் ஒன்று சேருகின்ற உலோகக் கழிவுகளில் இருந்து 79 %யும் கண்ணாடியிலிருந்து 95 %யும் அலுமினியத்திலிருந்து 90 %யும் பற்றரி கழிவுகளிலிருந்து 65 %யும் மீள் சுற்றோட்டம் செய்யும் ஐரோப்பிய நாடு எது ?
(1) சுவீடன் (2) சுவிற்சர்லாந்து (3) நோர்வே (4) டென்மார்க் (.........)

28. பின்வருவனவற்றில் பாலிலுள்ள இயற்கையான வெல்லம் எது ?
(1) மோல்றோஸ் (Maltose) (2) லக்றோஸ் (Lactose)
(3) புறக்றோஸ் (Fructose) (4) சுக்றோஸ் (Sucrose) (.........)

29. வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது உடலினுள் உற்பத்தி செய்யப்படும் ஹோமோன் எது ?
(1) இன்சுலின் (Insulin) (2) தைறொக்சின் (Thyroxine)
(3) அட்றினலைன் (Adrenaline) (4) மெலடோனின் (Melatonin) (.........)

30. மல்தூசியனின் (Malthusian theory) கோட்பாடு என்பது,
(1) மனிதக் கூர்ப்பு பற்றிய கோட்பாடாகும்.
(2) சனத்தொகை வளர்ச்சி பற்றிய கோட்பாடாகும்.
(3) மானிடவியல் பற்றிய கோட்பாடாகும்.
(4) பசுத்தாராக்கம் பற்றிய கோட்பாடாகும். (.........)

## பகுதி II

- **31** தொடக்கம் **50** வரை வினாக்களுக்குச் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டில்** எழுதவும்

31. தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் எந்த அமைச்சைச் சேர்ந்தது ?

..............................................................................................................

32. இவ்வருடம் முடிவடையும் போது இலங்கை எதிர்பார்க்கும் தனிநபர் வருமானம் எத்தனை அமெரிக்க டொலர்களாகும் ?

..............................................................................................................

33. புத்தாக்கங்களின் மேம்பாட்டிற்காக இலங்கையில் நிறுவப்பட்டுள்ள நிறுவனத்தைப் பெயரிடுக.

..............................................................................................................

34. இலங்கையில் சம்பிரதாயபூர்வமாக றப்பர் செய்கை நடைபெறும் மாகாணங்களுக்கு வெளியே முதன்முதலில் றப்பர் செய்கையை ஆரம்பிக்க எதிர்பார்க்கும் மாகாணம் எது ?

..............................................................................................................

35. இலங்கையில் மிளகுச் செய்கை பிரதானமாக நடைபெறும் மூன்று மாவட்டங்கள் உள்ளன. அவற்றுள் **ஒன்றைப்** பெயரிடுக.

..............................................................................................................

36. ஆறு மாதங்களில் இலங்கையின் எல்லாக் கிராம சேவகர் பிரிவுகளிலும் ஒரு வீடு வீதம் கட்ட ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை அண்ணளவாக எவ்வளவு ?

..............................................................................................................

37. இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் எங்கு அமைந்துள்ளது ?

..............................................................................................................

[பக். 5 ஐப் பார்க்க

38. "கிழக்கின் எழுச்சி" அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் முதலீடு செய்கின்றவர்களுக்கு எத்தனை ஆண்டு வரிச்சலுகை வழங்கப்படும் ?

.................................................................................................................................................

39. பூமி அதிர்ச்சியை நெறிப்படுத்தும் மத்திய நிலையம் இலங்கையில் எங்கு நிறுவப்பட்டுள்ளது ?

.................................................................................................................................................

40. இலங்கை எவ்வாண்டில் குடியரசாக மாறியது ?

.................................................................................................................................................

41. பிரித்தானியாவிற்கும் ஆர்ஜன்ரினாவிற்கும் இடையே ஏற்பட்டுள்ள மனக்கசப்பிற்கு காரணம் யாது ?

.................................................................................................................................................

42. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் உலக அழிவு ஏற்படும் எனச் சிலர் நம்புவது எந்தப் பழைய நாட்காட்டியின் அடிப்படையிலாகும் ?

.................................................................................................................................................

43. சில காலமாக சீனாவில் மனித உரிமைகளின் நிலையைப் பற்றி விமர்சனம் செய்து வந்த நாட்டைக் குறிப்பிடுக.

.................................................................................................................................................

44. பெரும் கண்டனத்திற்கு ஆளாகியுள்ளதும் தென் இந்தியாவில் கட்டப்படுகின்றதுமான அணுக்கரு மின் நிலையத்தைப் பெயரிடுக.

.................................................................................................................................................

45. சர்வதேச பொலிஸை எப்பெயரால் அழைப்பர் ?

.................................................................................................................................................

46. உலகில் மிகச்சிறந்த திரைப்படத்திற்கு வழங்கப்படும் பரிசு எப்பெயர் பெறும் ?

.................................................................................................................................................

47. உலகில் மிகப்பெரிய தொலைநோக்கியைத் தயாரிப்பதில் இரண்டு நாடுகள் ஒன்றாகச் செயற்பட்டு வருகின்றன. அவற்றுள் **ஒரு** நாட்டைப் பெயரிடுக.

.................................................................................................................................................

48. ரஷ்ய விண்வெளி நிறுவனத்தைப் (Space Agency) பெயரிடுக.

.................................................................................................................................................

49. புதிய ஸ்ரீவ்ஜொப்ஸ் (Steve Jobs) ஒருவராகக் கருதப்படும் Face Book உற்பத்தியின் காரணகர்த்தா யார் ?

.................................................................................................................................................

50. பிரித்தானிய எண்முறைப்படி ஒரு திரில்லியனின் பூச்சியங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

.................................................................................................................................................

***